2009 பிப்ரவரி 20]

35—

கட்டட வசதி

***9872—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரிலுள்ள மாவட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர், துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு, வேலூர் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) அலுவலகம், இணை சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி சார்பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகராம் வேலூர் நகரில் ஏற்கெனவே மாவட்டப் பதிவாளர் அலுவலகம் (குறுக்கீடுகள்) அதேபோல . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையினுடைய நடவடிக்கைக்கு இடையூறு பண்ணாதீர்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள்.

திரு. கி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தை ஒத்திவைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், துணைக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன், நீங்கள் கேள்வி கேளுங்கள்.

[2009 பிப்ரவரி 20

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகராம் வேலூரில் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும், Sub-Registrar Office-1, Sub-Registrar Office-2 என்று ஏற்கெனவே இயங்கி வந்துகொண்டிருந்தன. (குறுக்கீடுகள்) வேலூர் தாலுகா என்பது ஒடுக்கத்தூர் வரை 35 கிலோ மீட்டர் தொலைவிற்கு இருக்கக்கூடிய இடம். அதேபோல, அகரஞ்சேரி வரை இந்தப் பக்கம் 25 கிலோ மீட்டர் செல்கிறது. ஆனால், நம்முடைய மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில், ஒருங்கிணைந்த கட்டடம் காட்பாடி பகுதியிலே கட்டப்படும் என்று கூறியிருப்பது எங்களுக்கு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. ஒருங்கிணைந்த கட்டடம் என்று வைத்துவிட்டால், நாங்கள் எப்படி அங்கே பதிவு செய்யப் போவோம்? ஆகவே, Sub-Registrar Office-1, Sub-Registrar Office-2-ஐயுமே காட்பாடியிலே கொண்டு போய் வைப்பது என்பது, வேலூர் தாலுகாவிற்கே இழைக்கப்படுகிற மாபெரும் கொடூரம்; நிச்சயமாக ஒரு ஏமாற்றம். அப்படிப்பட்ட நிலையைத் தவிர்த்து, மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தையும், Sub-Registrar Office-1, அதேபோல Sub-Registrar Office-2 அலுவலகங்களை வேலூர் பகுதியிலேயே கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

1. முக்கிய பிரச்சினையை வினாக்கள்—விடைகள் நேரத்திற்குமுன் எழுப்ப முற்படுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களுக்கு நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே எச்சரிக்கையாகச் சொல்லியாகிவிட்டது. மீண்டும் நீங்கள் அவையின் நடவடிக்கைக்கு இடையூறு பண்ணாதீர்கள். கேள்வி நேரம் முடிந்த பிறகு, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைக் கேட்டு நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) அதையும் மீறி இதுபோல செய்துகொண்டிருந்தால், நான் நடவடிக்கை எடுக்கவேண்டியதிருக்கும்.

2. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், காட்பாடி என்றெல்லாம் இப்போது பேதம்

2009 பிப்ரவரி 20]

கிடையாது. இந்த இரண்டையும் இணைத்து, அது மாநகராட்சியாக ஆகிவிட்டது. எனவே, காட்பாடியும் திரு. ஞானசேகரனுக்குச் சொந்தம்; வேலூரும் எனக்குச் சொந்தம். நமக்குள்ளே எதற்கு இந்த பேதம்?

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் காவலர்கள், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். *(குறுக்கீடுகள்)*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றனர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், கேள்வியைக் கேளுங்கள்.

முற்பகல் 9-40

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் இங்கே அளித்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. ஆனால், நான் சொல்ல வந்தது . . .

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளியேற்றப்படும்போது அவையிலிருந்த காமராஜர் அவர்களின் படம் சரிந்தது.)

காமராஜர் படத்தை ஒன்றும் செய்துவிடாதீர்கள்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் காமராஜர் படத்தை உடைத்திருக்கிறார்கள். அது முறையல்ல. *(குறுக்கீடுகள்)*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் பதிவுத் துறை அலுவலகத்தை மக்களுடைய வசதிக்காகத்தான் அவ்வப்போது சில இடங்களிலே பிரித்துப் பிரித்து, சில இடங்களிலே தொலைதூரத்தில் இருக்கக்கூடிய இடத்திற்குக்கூட நாம் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே நம்முடைய வேலூரிலிருந்த பகுதியைப் பிரித்து பள்ளிகொண்டா என்றும், கணியம்பாடி என்றெல்லாம் பதிவுத் துறை அலுவலகத்தைக் கொடுத்தோம். இப்போது ஒடுக்கத்தூர் போன்ற பகுதியில் வரக்கூடியவர்கள் பதிவு

[2009 பிப்ரவரி 20

செய்யவேண்டுமென்று சொன்னால், 35 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டும். ஆகவே, நான் சொல்ல வருவது, நீங்கள் ஒருங்கிணைந்த ஒரு கட்டடத்தைக் கட்டுவது--எதனால் இப்படி ஒரு முயற்சி வந்தது என்று சொன்னால், வேலூரிலே இடம் இல்லையென்ற ஒரு காரணத்தைக் காட்டி இப்படிக் கொண்டுபோய்த் தள்ளியிருக்கிறார்கள். இப்போது வேலூரிலே நிறைய இடம் இருக்கிறது. ஏற்கெனவே காட்பாடியிலே D.I.G. office இருக்கிறது. D.I.G. office-ஐ வேண்டுமானால் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், பதிவாளர்-Sub-Registrar Office-I, Sub-Registrar office-II என்று இருப்பதை--வேலூர் பகுதி மக்கள் நெடுந்தொலைவு சென்று பதிவு செய்யக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறதென்று சொன்னால், அது வேலூர் மக்களுக்கு, வேலூர் தாலுகாவில் இருக்கக்கூடிய மக்களுக்கு இழைக்கக்கூடிய ஒரு அநீதியாகும். ஆகவே, D.I.G. office-ஐ வேண்டுமானால் அங்கே வைத்துக்கொள்ளுங்கள். Sub-Registrar Office-I, Sub-Registrar Office -II-ஐ வேலூரிலே வைப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நானும், திரு. சி. ஞானசேகரனும் அதைப் பேசித் தீர்த்துக்கொள்கிறோம் என்று அமைச்சரவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

36—

சுற்றுச் சுவர்

***29197—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, கோவிலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?